தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சிப்காட் அமைக்கப்படும் இடத்தை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வரைபடத்தை பார்வையிட்டு நேரில் ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் உள்பட அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் அமையவுள்ள சிப்காட் நிலையம்!

அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா ஆய்வு மேற்கொண்டார்!

தென்காசி.ஜூலை 28-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் புதிதாக அமையவுள்ள சிப்காட் நிலையத் தினை (25.07. 2025) அன்று மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் ஆகியோர் முன்னிலையில் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர்

முனைவர் டி.ஆர்.பி. ராஜா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தெரிவித்ததாவது.

திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதிகளும் பரவலாக்கபட்ட வளர்ச்சி உறுதி செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் தொழில் வளர்ச்சியில் ரொம்பவும் பின்தங்கிய மாவட்டமாக தென்காசி இருந்து வருகிறது. திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற வுடன் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய மாவட்டங்களுக்கு நல்ல தொழில் வளர்ச்சியை கொண்டு வர வேண்டும். படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும்.

தென் தமிழகத்தில் பெரிய வளர்ச்சி கொண்டு வரவேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறார். முனைப்போடு செயல்பட்டும் வருகிறார்.அதன் ஒரு பகுதியாக ஒரு விழிப்பாடாகத்தான் இன்று தமிழகத்தில் தென்காசியில் இது வரை சிப்காட் இல்லை. முதல் சிப்காட்டை அறிவித்த பெருமைக்குரிய முதலமைச்சராக நமது முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்.அவரது நல்ல ஆட்சியில் பல லட்சம் கோடி முதலீடுகள் தமிழ் நாடு முழுக்க வந்து கொண்டிருக்கிறது.அந்த வகையில் தென் தமிழகம் குறிப்பாக தென்காசிக்கு இந்த வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்காக சிப்காட் பூங்காவை உருவாக்கி, உருவாக்குவதற்காக முதல்கட்ட பணியை துவக்கி இருக்கிறோம். சட்டமன்றத்தில் அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறோம். அடுத்த கட்ட நடவடிக்காக இங்கு அடிப்படை வேலைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.இது நல்ல இடமாக இருக்கிறது.

கடந்த ஆட்சியில் 2018 தொழில் பூங்கா அமைக்க திட்டமிட்டு பணிகள் நடைபெற வில்லை என்றார்கள். அந்தப் பணியையும் எடுத்து முழுமையாக செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.குறிப்பாக பெண்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்க வேண்டும் என்ற பணியில் இருக்கிறோம். ஒன்றிய அரசின் தக வல் படி மூன்றரை ஆண்டுகளில் 31 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கி உருவாக்கி உள்ளதாக என்ற தகவல் இருக்கிறது.

அதைத் தாண்டி முதலமைச்சர் அவர்கள் பத்தரை லட்சம் கோடி முதலீட்டில் 30 லட்சம் பேர்களுக்கு புதிதாக வேலை வாய்ப்பு உருவாகி உள்ளது.

ஒரு சில நாட்களில் தூத்துக்குடியில் பிரம்மாண்டமான தொழிற்பேட்டை அறிவித்து பிரமாண்டமான தொழிற்சாலை உருவாக்கப்பட்டு அதற்கான கார் நிறுவனம் திறப்பு விழா 31 ஆம் தேதி நடக்கப் போகிறது. 2024 ஜனவரி மாதம் 7ம் தேதி கையெழுத்திட்டு,

பிப்ரவரி அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த ஜூலை 31 ஆம் தேதி மிகப்பெரிய கார் நிறுவனம் முதல் காரை வெளியே கொண்டு வருகிறது

இது சாதாரண சின்ன தொழிற் சாலை இல்லை. மிகப்பெரிய கார் நிறுவனம் இந்தியாவுக்கு வந்து தமிழ் நாட்டில் வந்து கிட்டத்தட்ட 18 மாத கணக்கு வரும் ஆனால் 15 மாதங்களில் எல்லாப் பணிகளும் முடித்து திறப்பு விழா காண்கிறது.

இந்த வேகம் இந்த ஸ்பீடு வந்து திராவிட நாயகன் அவர்களால் திராவிட மாடல் ஆட்சி தவிர வேறு எங்குமே ஒரு ஸ்பீடு இந்த அளவுக்கு இந்திய அளவில் எந்த மாநிலத்திலும் இந்த ஸ்பீடு இல்லை.

ஆகையால் தான் எல்லா முதலீட்டாளர்களும் தமிழகத்தை நோக்கி படையெடுத்து வருகிறார் கள்.

முதலமைச்சர் அவர்கள் பல்லாயிரக்கணக்கில் அரசு வேலைகளை அவ்வப் போது வழங்கி வருகிறார் கள்.அதைத் தாண்டி தனியார்க்கும் டிமாண்ட் இருந்து வருகிறது.தலைவர் கள் கொண்டுவரக்கூடிய அடிப்படை திட்டங்கள் தமிழகம் எங்கும் வளர்ச்சி உள்ளது.பெரிய நிறு வனங்கள் வரும்போது சிறிய நிறு வனங்களும் வருகிறது.அதனால் தனியார்க்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டிய நிலை உள்ளது. நம் மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டிய முன்னெடுப்புகளை முதலமைச்சர் அவர்கள் கையில் எடுத்துள்ளார்கள்.

நான்கு ஆண்டுகளில் 50 லட்சம் பேருக்கு மேல் வேலை வாய்ப்பு உருவாக்கி உள்ள ஆட்சியாக இந்த திராவிட மாடல் ஆட்சி இருந்து வருகிறது.

சொன்னதை செய்யும் அரசு திராவிட மாடல் அரசு.சொன்னதைச் செய்யும் முதலமைச்சர் நமது முதலமைச்சர் திட்டமிடல் சரியாக இருந்து அந்த அறிவிப்பு சரியாக இருந்து செயல்பட்டு வருகிறது. எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற முடிவில் எல்லாம் திராவிட நாயகன் அவர்கள் ஆட்சி நடப்பதில்லை. சரியான திட்டமிடல் செய் திருக் கிறோம் நிச்சயமாக எங்களது முயற்சி விரைவில் நல்ல ஒரு தொழிற்சாலையை உருவாக்க வேண்டும் என்பதுதான்.

தொழிற்சாலையை கொண்டு வருவது சாதாரண விஷயம் கிடையாது.10 லட்சம் கோடி கொண்டு வந்து விட்டதால் உங்களுக்கு சாதாரணமாக தெரிகிறது.அந்த அளவுக்கு முதலமைச்சர் அவர்கள் அதனை உங்களுக்கு சாதாரணமாக கொண்டு வந்து தெரிவித்து விட்டார்கள்.

அவரே எத்தனை வெளி நாடுகளுக்கு சென்று முதலீட்டாளர்களை சந்தித்து அதன் மூலம் முதலீடு வருகின்றது , என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனவே நிறைய திட்டமிடல் இருக்கிறது அதற்கேற்ப தொழிற்சாலைகள் நிச்சயமாக கொண்டு வரப்படும்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தெரிவித்தார்.

நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், சங்கரன்கோவில் கோட்டாட்சியர் கவிதா, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு, சீனிவாசன்,பரமகுரு,மாவட்ட அவைத்தலைவர் சுப்பையா, மாநில மருத்துவரணி துணை செயலாளர் செண்பக விநாயகம்,மாநில வர்த்தக அணி செயலாளர் இணை செயலாளர் முத்துச் செல்வி,

ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன், கடற்கரை,பொன் முத்தையா பாண்டியன், பெரியதுரை சேர்மத்துரை,பால்துரை, வெள்ளத்துரை, அன்பரசு, கிறிஸ்டோபர், ராமச்சந்திரன்,நகரச் செயலாளர்கள் பிரகாஷ், அந்தோணிசாமி,நாகூர் கனி உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

மக்களை ஒன்றிணைக்கும் “ஓரணியில் தமிழ்நாடு” என்னும் மாபெரும் முன்னெடுப்பிற்கு வலுச்சேர்க்கும் விதமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்லூரிகளில் திமுக மாணவர் அணி துண்டறிக்கை விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.அந்த வகையில், விருதுநகர் வடக்கு மாவட்ட திமுக மாணவர் அணி சார்பில், திருச்சுழி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களிடம் ஓரணியில் தமிழ்நாடு திமுக உறுப்பினர் சேர்க்கை தொடர்பான பரப்புரை பிரசாரம் கல்லூரி நுழைவு வாயில் முன்பு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கருப்புராஜா தலைமையில் நடைபெற்றது. இதில் கல்லூரி மாணவர்களுக்கு ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை துண்டறிக்கை பிரசுரம் செய்தனர். இதில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் பாலமுருகன் மற்றும் மாணவரணி நிர்வாகிகள் ராஜதுரை, பஜார் குரு, குமரேச பாண்டியன், ரகுராஜா, பாண்டி, பிரகாஷ், முத்துக்குமார், தெய்வம், அய்யாசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாநகராட்சி தச்சை மண்டலம் 3,13 வார்டுக்கான உங்களுடன் ஸ்டாலின் முகாம் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் மேயர் ராமகிருஷ்ணன் பங்கேற்று மின்வாரியத்தில் பெயர் மாற்றம் கேட்டு அளித்த மனுவுக்கு உடனடி தீர்வு மூலம் கோரிக்கை நிறைவேற்றினார். உடன் மாமன்ற உறுப்பினர் சுப்பிரமணியன், டாக்டர் சங்கர்,உதவி ஆணையர் ஜான்சன் தேவ சகாயம் தகவல் தொழில்நுட்ப பணி காசிமணி உள்பட பலர் உள்ளனர் .

இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் மருத்துவத்தில் சிறந்த முதல் மாநிலமாக திகழ்கிறது!

திருப்பத்தூரில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜூலை 28-சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அரசு மருது பாண்டியர் மருத்துவமனையில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 63 லட்சத்தில் புதிதாக கட்டப்பட உள்ள டயாலிசிஸ் சுத்திகரிக்கும் மையம் பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி கா. பொற்கொடி தலைமையில் கார்த்தி சிதம்பரம் எம்.பி. முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குனர் அருள்தாஸ் வரவேற்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது. முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தொகுதி மேம்பாட்டு நிதி யினை திட்டமிட்டு செலவழித்து வருகிறார். பெரும் நிதிகள் மருத்துவத்திற்கும் கல்வி மற்றும் பல்வேறு கட்டமைப்பு களுக்கும் ஒதுக்கீடு செய்து வருகிறார். இங்கு ரூபாய் 63 லட்சத்தில் டயாலிசிஸ் மையம் அமைவது மிகவும் பொருத்தமானதாகும். இப்பகுதி மக்கள் இதை நன்றாக பயன்படுத்திக் கொள்ளலாம் .இதே போல் சிங்கம்புணரியில் ரூபாய் 65 லட்சம் மதிப்பீட்டில் டயாலிசிஸ் மையம் எம்.பி. நீதியின் மூலம் கட்டப்பட்டது இன்று மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. பாராளுமன்றத் திற்குட்பட்ட ஆறு சட்டமன்ற தொகுதியிலும் இது வரை அவர் தலா ரூபாய் ஒரு கோடி அளவில் மருத்துவ கட்டமைப்புகளுக்காக நீதி ஒதுக்கி செலவழித்து வருகிறார் . இந்தியாவிலேயே தமிழகம் மருத்துவத் துறையில் சிறந்த மாநிலமாக விளங்கி வருகிறது .சிறந்த மருத்துவ கட்டமைப்பு வசதிகள் உள்ளது. பல்வேறு வெளி மாநிலங்கள், வெளி நாட்டவர்கள்



தமிழகத்திற்கு வந்து மருத்துவ சேவையினை பெற்று வருகிறார்கள் . அதற்கு காரணம் இங்கு தரமான மருத்துவசிகிச்சை அளிக்கப்படுகிறது. கட்டணமும் குறைவாக உள்ளது .தமிழக முதல்வர் தளபதி அவர்கள் பதவி ஏற்ற நாள் முதல் வசதி படைத்தவர்கள் பெறும் மருத்துவத்தை ஏழை ,எளிய ,நடுத்தர மக்கள் பெற வேண்டும் என்ற அடிப்படையில் மருத்துவத்துறையில் பல்வேறு கட்டமைப்பு வசதிகளை செய்து வருகிறார் .அதில் தமிழகம் முன்னேறி வருகிறது.தலைவர் கலைஞர் அவர்கள் கலைஞர் மருத்துவ காப்பீடு திட்டத்தை கொண்டு வந்தார்.இதன் மூலம் எல்லா மக்களும் பயன்அடைந்து வருகிறார்கள் . அதேபோல் முதல் வர் தளபதி அவர்கள் மருத்துவத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்ட பணிகளை செய்து வருகிறார். இதை பொதுமக்கள் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு டயாலிசிஸ் மையம் அமைக்க நிதி ஒதுக்கிய தற்கும், சிங் கம்புனரி யில் ருபாய் 65லட்சத்தில் டயாலிசிஸ் மையம் அமைத்து தந்ததற்கும்,, முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி அவர்களுக்கு திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய நிதிஅமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. பேசியதாவது சிவகங்கை மாவட்டம் அனைத்து மருத்துவ வசதிகளை கொண்டதாக அமைய என்பது எனது விருப்பமாகும். மருத்துவ சேவை இன்று அவசியமாகிறது. அரசு ,அரசு சார்ந்த துறைகள் இலவசமாக தரமான மருத்துவசேவையை தர வேண்டும் என்று நான் விரும்புகிறேன் . பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதியில் அனைத்திலும் இதற்கான உபகரணங்கள்வாங்கு தல், மருத்துவ கட்டமைப்பு வசதிகளை செய்து வருகிறேன். இன்று டயாலிசிஸ் அதிகரித்து உள்ளது. தனியார் மருத்துவமனையில் அதிக அளவில் கட்டணங்கள் வசூலிக்கப்படுகிறது. கூட்டமும் அதிகமாக உள்ளது. திருப்பத்தூர் பகுதியில் மருத்துவமனையில் டயாலிசிஸ் மையம் இல்லை என்று கேள்விப்பட்டதும் இங்கு டயாலிசிஸ் மையம் அமைவதற்கான ஏற்பாடுகளை செய்து உள்ளேன். இங்கு டயாலிசிஸ் கட்டடம் சிறப்பான முறையில் தரமாக கட்டப்பட வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு ள் ஒப்பந்ததாரர் பணியினை ஒப்படைத்து முடித்து தர வேண்டும். அரசு கட்டிடங்கள் குறைந்தது 40 ஆண்டுகளிலிருந்து 50 ஆண்டுகள் நிலையாக இருக்க வேண்டும் .அதற்கு ஏற்ப ஒப்பந்தக்காரர்கள் கட்டிடத்தை கட்டித் தர வேண்டும். இதை நான் எனது வேண்டுகோளாக வைக்கிறேன். இதை மக்கள் நன்றாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். .தனியார் நடத்தும் டயாலிசிஸ் மையங்களில் ருபாய் 6000முதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இது தவிர போக்குவரத்து, சாப்பாடு செலவு ஏற்படுகிறது . இங்கு அவர்கள் இலவசமாக சிகிச்சை பெற்றுச் சொல்லலாம் .இதை மக்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு. ப. சிதம்பரம் எம்.பி .பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் திருப்பத்தூர் பேரூராட்சி மன்ற தலைவர் திருமதி கோகிலா ராணி நாராயணன் வாழ்த்துரை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ .ஒன்றிய செயலாளர்கள் எஸ்.. சண்முக வடிவேல், விராமதி மாணிக்கம், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கான்முகமது, ஒன்றிய துணை செயலாளர் எஸ்.முத்துக்குமார், பேருர் கழகச் செயலாளர் ஆர். கார்த்திகேயன் திட்ட இயக்குனர் அரவிந்த் மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய் காந்தி துணை தலைவர் கணேசன்,அருணகிரி, தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, ஒன்றிய பொருளாளர் ஏ .எம். கண்ணன், துணைச் செயலாளர் பார்த்தசாரதி, புதூர் கண்ணன்மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன் மற்றும் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டார்கள். இதேபோல் சிங்கம்புணரியில் ரூபாய் 65 லட்சத்தில் ப..சிதம்பரம் எம்.பி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட டயாலிசிஸ் மையத்தினை மக்களுக்கு ப.சிதம்பரம் எம்.பி. அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் அர்ப்பணித்தார்கள் . இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி, பேரூராட்சி மன்ற தலைவர் அம்பல முத்து, துணை தலைவர் இந்தியன் செந்தில் ,ஒன்றிய செயலாளர்கள் பூமணி, பாலசுப்பிரமணியன், துணைச் செயலாளர்கள் சிவபுரி சேகர்,எஸ்.முத்துகுமார் , ஆர்.புகழேந்தி மனோகரன்,குடோண் மணி, பேருர் கழக செயலாளர் கதிர்வேல், அலாவுதீன், யாகூப், மற்றும் கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டார்கள்.

நெல்லை தச்சை ஸ்ரீதேவி மஹாலில் வைத்து நடைபெற்ற 3 மற்றும் 13 வார்டுகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று பொதுமக்கள் சார்பில் 1050 க்கு மேல் பெறப்பட்ட மனுக்களை மாநகராட்சி அதிகாரிகளிடம் மக்களுடன் இணைந்து வழங்கினார்.ஒரு சில மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டது.நிகழ்வில் பகுதி செயலாளர் சுப்பிரமணியன்,கழக நிர்வாகிகள் சிந்து முருகன்,வேங்கை வெங்கடேஷ்,சிவா,ஷெட்டி,வினோத் குமார்,அந்தோணி ராஜ்,மணிகண்டன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.